# Vetrii IAS Study Circle

*The Best Academy for IAS & TNPSC Exams*

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011

# TNPSC CCSE IV 2019

# PRELIMS EXAM ANSWER KEY

# GENERAL TAMIL

| General Tamil | |
|---|---|
| Partwise Analysis | |
| Part | Number of questions |
| Part A | 36 |
| Part B | 28 |
| Part C | 36 |



**1.** பின்வரும் தொடரிலுள்ள நிகழ்கால வினைமுற்றைத் தேர்வு செய்க?

(A) பழுத்த பழம் (B) பழுக்கும் பழம்

(C) பழுக்கின்றது (D) பழங்கள் பழுத்தன

விடை : (C) பழுக்கின்றது

**2.** படி என்ற வேர்ச்சொல்லில் இருந்து வினை எச்சத்தை உருவாக்குக?

(A) படித்து (B) படித்தல்

(C) படித்த (D) பாடுதல்

விடை : (A) படித்து

**3.** "கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம் அறிக?

(A) கற்றல் (B) கற்பனை

(C)கண்டான் (D) கல்லை

விடை : (A) கற்றல்

**4.** "இயல்பானது" வேர்ச்சொல்லறிக.

(A) இயல் (B) இயல்பு

(C) இயைபு (D) இய

விடை : (A) இயல்

**5.** "ஏ" என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்?

(A) தலைவன் (B) நெருப்பு

(C) அரண் (D) அம்பு

விடை : (D) அம்பு

**6.** "வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி" என்று
தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர் யார்?

(A) பாவலரேறு பெருஞ்சித்திரனார் (B) பெருங்குன்று கிழார்

(C) பெருநாவலர் (D) பாவேந்தர் பாரதிதாசன்

விடை : (A) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 13

**7.** "துரை மாணிக்கம்" என்பது இவரின் இயற்பெயர்

(A) கவிஞர் சுரதா (B) கவிஞர் மீரான்

(C) பாரதிதாசன் (D) பெருஞ்சித்திரனார்

விடை : (D) பெருஞ்சித்திரனார்

விளக்கம் :

1. **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை.மாணிக்கம்.**
2. இவரது ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்.
3. 10.03.1933 அன்று பிறந்த இவர், 11.06.1995ஆம் நாள் மறைந்தார்.
4. கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.
5. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு (முதல் பருவம்), பக்க எண் - 74

**8.** திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் யார்?

(A) சி.வை. தாமோதரம் (B) வ.சுப. மாணிக்கம்

(C) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (D) சீனி. வேங்கடசாமி

விடை : (C) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

விளக்கம் :

கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி. சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு (முதல் பருவம்), பக்க எண் – 74

**9.** பரிதிமாற்கறைஞர் நடத்தி வந்த ஞானபோதினி என்னும் இதழைத் தொடங்கி வைத்தவர் யார்?

(A) மு.சி. பூர்ணலிங்கம் (B) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

(C) கே.வி.சுப்பையா (D) எல்.வி.இராமசுவாமி

விடை : (A) மு.சி. பூர்ணலிங்கம்

விளக்கம் :

1. **பரிதிமாற்கலைஞர், மு.சி.பூர்ணலிங்கத்தினால் தொடங்கி நடத்தப்பட்ட ஞானபோதினி என்னும் இதழை நடத்தினார்**.
2. ஞானபோதினியிலும் விவேகசிந்தாமணியிலும் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துத் தமிழ் வியாசங்கள் என்னும் பெயரில் அவர் வெளியிட்டார்.
3. பரிதிமாற்கலைஞர் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.
4. மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனிச் செம்மொழி என்னும் தலைப்பில், தமிழின் அருமை பெருமைகளை விளக்கி அரியதொரு கட்டுரை வரைந்தார்.
5. தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 21

**10.** பெரியபுராணத்திற்கு சேக்கிழாரிட்டப் பெயர்

(A) சிவதொண்டர் புராணம் (B) சிவனடியார் புராணம்

(C) திருத்தொண்டர் புராணம் (D) தொண்டர்சீர் புராணம்

விடை : (C) திருத்தொண்டர் புராணம்

விளக்கம் :

1. தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மரும் ஆக எழுபத்திருவர் சிவனடியார் ஆவர்.
2. அவ்வடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் பெரிய புராணம் எனும் பெயர் பெற்றது.
3. **இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் எனும் பெயர் பெற்றது**.
4. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ எனச் சேக்கிழார் பெருமானைப் புகழ்ந்துரைத்துள்ளார்.
5. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்பார் திரு.வி.கலியாணசுந்தரனார்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 110

**11.** சுந்தரம்பிள்ளையைப் போற்று முகமாக தமிழக அரசு நிறுவியது யாது?

(A) பல்கலைக்கழகம் (B) அரசவைக் கவிஞர் பணி

(C) அறக்கட்டளை (D) பேராசிரியர் பணி

விடை : (A) பல்கலைக்கழகம்

விளக்கம் :

1. சென்னை மாகாண அரசு இவருக்கு ராவ்பகதூர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.
2. **தமிழ்நாடு அரசு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிப் பெருமைப்படுத்தியுள்ளது**.
3. இவரது நீராருங்கடலுடுத்த என்ற தமிழ் வாழ்த்துப்பாடலே தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்கப்பட்டுள்ளது.
4. இவர்பற்றிய பிற நூல்கள் : நூல் தொகை விளக்கம், திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி, திருவிதாங்கூர்ப் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி என்பன

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 55

**12.** பொருளறிந்து பொருத்துக

(a) தடக்கர் 1. கரடி
(b) எண்கு 2. காட்சி
(c) வள்உகிர் 3. பெரிய யானை
(d) தெரிசனம் 4. கூர்மையான நகம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

விடை : (A) 3 1 4 2

**13.** அவன் சித்திரையான் – எவ்வகை பெயர்

(A) குணப் பெயர் (B) இடப்பெயர்

(C) காலப் பெயர் (D) தொழில் பெயர்

விடை : (C) காலப் பெயர்

**14.** வேற்றுமை உருபை இணைத்து தொடரை ஒழுங்குபடுத்தி எழுதுக

மாணவர்கள் வட்டமாக உட்காரச் செய்க.

(A) மாணவர்கள் உட்கார வட்டமாகச் செய்க

(B) மாணவர்களை வட்டமாக உட்காரச் செய்க

(C) மாணவர்களை உட்கார வட்டமாகச் செய்க

(D) மாணவர்களை செய்க வட்டமைாக உட்கார

விடை : (B) மாணவர்களை வட்டமாக உட்காரச் செய்க

**15.** சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குதல்

(A) மாலை மீது மலையின் மழை பெய்தது நேற்று

(B) மலையின் மாலை மீது நேற்று பெய்தது மழை

(C) நேற்று மாலை மலையின் மீது மழை பெய்தது

(D) பெய்தது மழை மலையின் மீது நேற்று மாலை

விடை : (C) நேற்று மாலை மலையின் மீது மழை பெய்தது

**16.** அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்து எழுதுக.

(A) கொற்றை, கெண்டை, கண், கீரன், காடை

(B) கெண்டை, கீரன், கொன்றை, காடை, கண்

(C) கண், காடை, கீரன், கெண்டை, கொன்றை

(D) கண், கீரன், காடை, கொன்றை, கெண்டை

விடை : (C) கண், காடை, கீரன், கெண்டை, கொன்றை

**17.** காடுகளில் வாழ்ந்தமக்கள் விலங்கின் பெயர் கொண்டு அமைந்த ஊரின் பெயர் என்ன?

(A) ஆட்டையாம்பட்டி (B) வேப்பனேரி

(C) புளியம்பட்டி (D) புளியங்குடி

விடை : (A) ஆட்டையாம்பட்டி

விளக்கம் :

1. காட்டின் நடுவில் வாழ்ந்த மக்கள், அங்குத் திரியும் விலங்குகளால் தமக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர்.
2. அவ்வூர்கள் **பட்டி, பாடி** என்றழைக்கப்பெற்றன.
3. ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி, சின்னகொல்லப்பட்டி, பெரியகொல்லப்பட்டி முதலிய நூற்றுக்கணக்கான பட்டிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 12

**18.** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி யார்?

(A) அம்பேத்கர் (B) இராஜாஜி

(C) அண்ணா (D) காமராசர்

விடை : (A) அம்பேத்கர்

**19.** அறிஞர் அண்ணாவின் கவிதைகள் "தமிழ்பீடம்" என்னும் இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆண்டு எது?

(A) 2005 (B) 2004 (C) 2003 (D) 2006

விடை : (A) 2005

**20.** தமிழில் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டவர்

(A) ஜி.யு.போப் (B) வீரமாமுனிவர்

(C) H.A. கிருஷ்ணப்பிள்ளை (D) ரா.பி. சேதுபிள்ளை

விடை : (B) வீரமாமுனிவர்

விளக்கம் :

1. இவர், தமிழில் முதன் முதலாகச் **சதுரகராதி** என்னும் அகரமுதலியை வெளியிட்டார்;
2. தேம்பாவணி என்னும் கிறித்தவக் காப்பியத்தை இயற்றினார்;
3. தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைப் படைத்தார்;
4. கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றினார்
5. பரமார்த்தகுரு கதை என்னும் நகைச்சுவை நூலை எழுதினார்.

புத்தகம் : 8ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 9

**21.** "தபோலி" என்னும் சிற்றூர் எந்த மாநிலத்தில் உள்ளது

(A) மராட்டிய மாநிலம் (B) குஜராத் மாநிலம்

(C) தமிழ்நாடு (D) கர்நாடகம்

விடை : (A) மராட்டிய மாநிலம்

விளக்கம் : மராட்டிய கொங்கண மாவட்டத்தில் தபோலி என்னும் சிற்றூர் உள்ளது.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 68

**22.** "காவடிச் சிந்தின் தந்தை" என அழைக்கப்படுபவர்____________

(A) பாரதியார்

(B) சென்னிகுளம் அண்ணாமலையார்

(C) அருணகிரியார்

(D) விளம்பி நாகனார்

விடை : (B) சென்னிகுளம் அண்ணாமலையார்

விளக்கம் :

1. சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியமாகும்
2. **தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார்**.
3. 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார்.
4. இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 57 [புதியது]

**23.** கலிங்கத்துப்பரணி – நூலில் அமைந்துள்ள <u>தாழிசைகள்</u> எண்ணிக்கை யாது?

(A) 595 (B) 599 (C) 593 (D) 597

விடை : (B) 599

விளக்கம் :

1. ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியத்திற்குப் பரணி என்பது பெயர்.
2. பரணி இலக்கியங்களுள் தமிழில் தோன்றிய முதல் நூல் கலிங்கத்துப்பரணி.
3. கலிங்க மன்னன் அனந்தபத்மன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர் தொடுத்து வெற்றி பெற்றான். அவ்வெற்றியைப் பாராட்டி எழுந்த இந்நூல், தோல்வியுற்ற கலிங்கநாட்டின் பெயரால் அமைந்துள்ளது.
4. இந்நூலில் **ஐந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது தாழிசைகள்** உள்ளன. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான ஒட்டக்கூத்தர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்துள்ளார்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 40

**24.** "நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே" – இவ்வரிகள் இடம்பெற்ற நூல்

(A) வங்கத்துப் பரணி (B) திராவிடத்துப் பரணி
(C) கலிங்கத்துப் பரணி (D) தக்கயாகப் பரணி

விடை : (C) கலிங்கத்துப் பரணி

**25.** அதியமானின் தூதராக ஔவை சென்றதைக் கூறும் நூல் எது?

(A) பதிற்றுப்பத்து (B) பரிபாடல்
(C) புறநானூறு (D) ஆத்திச்சூடி

விடை : (C) புறநானூறு

விளக்கம் :

1. சங்ககாலப் பெண்பாற்புலவருள் சிறந்து விளங்கியவர் ஔவையார்;
2. அவர் அதியமான் நெடுமானஞ்சி என்னும் குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்புக் கொண்டவர். அம்மன்னன் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்.
3. **நீண்டநாள் வாழச் செய்யும் அமிழ்தத்தை ஒத்ததோர் அரிய நெல்லிக்கனியைத்**

**தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு ஈந்து மகிழ்ந்த செய்தியைப் புறநானூற்றால் அறியலாம்.**

4. ஔவையார் பாடிய பாடல்களைப் புறநானூற்றிலும், நற்றிணையிலும், குறுந்தொகையிலும் காணலாம்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 14

**26.** தன்வினை வாக்கியத்தை தேர்ந்தெடுக்க

(A) அப்பூதி அடிகள் நான்மறை கற்கவில்லை

(B) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்

(C) அப்பூதி அடிகள் நான்மறை கற்றாரா?

(D) அப்பூதி அடிகள் நான்மறை கற்பித்தார்

விடை : (B) அப்பூதி அடிகள் நான்மறை கற்றார்

**27.** இலக்கணக் குறிப்புத் தருக : கங்கையும் சிந்துவும்

(A) உம்மைத் தொகை

(B) பெண்பால் பெயர்கள்

(C) எண்ணும்மை

(D) அன்மொழித் தொகை

விடை : (C) எண்ணும்மை

**28.** சால தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம்

(A) மிகும்

(B) மிகாது

(C) சில இடங்களில் வரும்

(D) சில இடங்களில் வராது

விடை : (A) மிகும்

விளக்கம் :

சாலப்பேசினார் , தவச்சிறிது

சால, தவ, தட, குழ என்னும் உரிச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 79 [புதியது]

**29.** தாழ்பூந்துறை – என்ற சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பு தருக.

(A) ஏவல் வினைமுற்று

(B) உரிச்சொல் தொடர்

(C) பண்புத் தொகை

(D) வினைத்தொகை

விடை : (D) வினைத்தொகை

**30.** தென்னாப்பிரிக்க வரலாற்றில் யாருடைய பெயர் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார்?

(A) திலகவதி

(B) தில்லையாடி வள்ளியம்மை

(C) ஜான்சிராணி

(D) நாகம்மை

விடை : (B) தில்லையாடி வள்ளியம்மை

விளக்கம் :

தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள், **தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம்** என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 10

**31.** உலகம் உருண்டையானது என்பதைத் தம் தொலைநோக்கியால் கண்டறிந்து சொன்னவர் யார்?

(A) கலீலியோ (B) நிகொலஸ்கிராப்ஸ்

(C) சி.வி.இராமன் (D) தாமஸ் ஆல்வா எடிசன்

விடை : (A) கலீலியோ

விளக்கம் :

1. நிக்கோலஸ்கிராப்ஸ் என்பவர் உலகம் தட்டை இல்லை உருண்டையானது என்று சரியாகக் கணித்துக் கூறினார்.
2. **பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலியோ, உலகம் உருண்டையானது என்பதைத் தம் தொலைநோக்கியால் கண்டுபிடித்துச் சொன்ன பிறகுதான் மக்கள் ஏற்றுக் கொண்டனர்**.
3. மேலை நாட்டினர் கண்டறிந்ததற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சொல்லியது ஒரு தமிழ்க்குரல். அந்தக்குரலுக்கு உரியவர் திருவள்ளுவர்.

புத்தகம் : 8ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 8

**32.** தமிழுக்கு அரும்பணி ஆற்றிய அமெரிக்கப் பேராசிரியர்களில் ஒருவர்

(A) ஆறுமுக நாவலர் (B) ஜோசப் கொன்ஸ்டான்

(C) ஜேம்ஸ் பிராங்கா (D) ஜி.யு.போப்

விடை : (C) ஜேம்ஸ் பிராங்கா

விளக்கம் :

அமெரிக்கா நாட்டுப் பேராசிரியர்கள் வி.எஸ்.இராஜன், ஜார்ஜ் எல்.ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம். லிண்ட் ஹோம், இந்திரா நார்மன், ஹால் சிப்மேன். டபிள்யூ, குளோத்தி, **ஜேம்ஸ் பிராங்கா**, மறைந்த பேராசிரியர் ஏ.கே.இராமானுஜம் முதலியோர் தமிழுக்கு ஆற்றிய தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகள் போற்றத்தக்கன.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 43

**33.** “இங்கே“ ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்” என்று தன் கல்லறையில் எழுதச் சொன்னவர் யார்?

(A) கால்டுவேல் (B) ஜியு.போப்

(C) வீராமுனிவர் (D) ஷெல்லி

விடை : (B) ஜியு.போப்

விளக்கம் :

1. தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப், 1908ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினொன்றாம் நாள் தம் இன்னுயிரை நீத்தார்.
2. அவர், தம் கல்லறையில், **"இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்"** என எழுதவேண்டுமென்று தமது உயில்யில் எழுதி வைத்தார்.
3. ஆங்கிலமொழியினை அன்னை மொழியாகக் கொண்ட போப், "தமிழ் மாணவன்" என்று தம்மை அறிவித்துக் கொண்டவர்,

புத்தகம் : 8ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 14

**34.** சித்தர்களின் ஆதி சித்தராக கருதப்படுபவர் யார்?

(A) பாம்பாட்டிச்சித்தர் (B) திருமூலர்

(C) போகர் (D) கோரக்கர்

விடை : (B) திருமூலர்

விளக்கம் :

1. சித்தர்களின் ஆதி சித்தராகக் கருதப்படுபவர் **திருமூலர்**.
2. இவரது காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு அல்லது 6ஆம் நூற்றாண்டு என்பர்.
3. சித்தர்களில் கலகக்காரர் என்று கருதப்படும் சிவவாக்கியரின் காலம் 9ஆம் நூற்றாண்டு. மற்றவர்கள் கி.பி. 14ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்தவர்கள் என்று கூறுவர்.
4. சித்தர் காலத்தைப் போலவே சித்தர்களின் எண்ணிக்கையும் ஆய்வுக்குரியதாகவே உள்ளது. சித்தர் தொகை குறித்த பட்டியல்கள் ஒவ்வொன்றும் மாறுபடுகின்றன.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 222 [புதியது]

**35.** "லிட்டன் பிரபு" எழுதிய "இரகசிய வழி" என்ற நூலைத் தழுவி வெளிவந்த நூல்

(A) மனோன்மணீயம் (B) அகத்தியம்

(C) முறுவல் (D) குணநூல்

விடை : (A) மனோன்மணீயம்

விளக்கம் :

1. நாடகத்தமிழ் நூல்களுள் தலையாய சிறப்பினையுடையதாக விளங்குவது மனோன்மணீயம்,
2. நாடகக் காப்பியங்களால் சிறப்புப் பெற்று விளங்கும் வடமொழிக்கு ஈடாக நடிப்புச் செவ்வியும் இலக்கியச் செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்றது.
3. **இந்நாடகம் லிட்டன் பிரவு என்பார் ஆங்கிலத்தில் எழுதிய "இரகசிய வழி" என்ற நூலைத் தழுவி அமைந்தது**.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 55

**36.** மனோன்மணியத்தை இயற்றியவர்

(A) சுந்தரம் பிள்ளை (B) சுந்தர முனிவர்

(C) சுந்தரர் (D) சுந்தர மூர்த்தி

விடை : (A) சுந்தரம் பிள்ளை

விளக்கம் :

1. மனோன்மணீயத்தைத் தமிழன்னைக்கு இயற்றயளித்தவர். **பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை** ஆவார்.
2. இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தார்.
3. இவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.
4. கோடாக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரைத் தமது ஞானாசிரியராகக் கொண்டு ஒழுகி வந்தார். இவர் காலம் 1897 (19ஆம் நூற்றாண்டு)

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 57

**37.** செங்கீரைப் பருவம் – பிள்ளைத்தமிழில் எந்தப் பருவமாக விளங்குகிறது?

(A) இரண்டாம் பருவம் (B) ஐந்தாம் பருவம்

(C) முதற் பருவம் (D) மூன்றாம் பருவம்

விடை : (A) இரண்டாம் பருவம்

விளக்கம் :

1. செங்கீரைப் பருவம் பிள்ளைத்தமிழில் **இரண்டாம் பருவமாகும்**.
2. பொருள் தெரியாத ஒலியைக் குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிப்பது இது.
3. இளங்குழந்தை ங்க, ங்க என்று கூறக்கேட்டுத்தாய் உகக்கும் பருவம் இது. இவ்வொலி மழலையைக் காட்டிலும் இளம் பருவத்தை உடையது.
4. தொட்டில் பிள்ளை தலையையுயர்த்திக் கையால் ஊன்றி உடம்பை அசைத்தலைச் செங்கீரையாடுதல் என்பர்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 70

**38.** வேய்புரை தோள் என்ற உவமைத் தொடருக்கு பொருள் தருக.

(A) தென்னை போன்ற தோள் (B) பளிங்கு போன்ற தோள்

(C) மூங்கில் போன்ற தோள் (D) வாழை போன்ற தோள்

விடை : (C) மூங்கில் போன்ற தோள்

**39.** பிறவினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(A) எழிலரசி சிலப்பிதிகாரம் கற்றாள்

(B) எழிலரசியால் சிலப்பதிகாரம் கற்பிக்கப்பட்டது

(C) எழிலரசி சிலப்பதிகாரம் கல்லாள்

(D) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

விடை : (D) எழிலரசி சிலப்பதிகாரம் கற்பித்தாள்

**40.** தாய்மொழியை உயிராகப் போற்றுமாறு ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார். பொருந்தமான வாக்கியத்தை தேர்ந்தெடுக்க

(A) அயற்கூற்று வாக்கியம் (B) நேர்க்கூற்று வாக்கியம்

(C) கலவை வாக்கியம் (D) எதிர்மறை வாக்கியம்

விடை : (A) அயற்கூற்று வாக்கியம்

**41.** பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்

(A) தன்வினை வாக்கியம் (B) செய்வினை வாக்கியம்

(C) பிறவினை வாக்கியம் (D) செயப்பாட்டுவினை வாக்கியம்

விடை : (C) பிறவினை வாக்கியம்

விளக்கம் :

பாத்திமா திருக்குறள் கற்பித்தாள்

1. பிறவினைத்தொடர் - எழுவாய், ஒரு செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பது.
2. பாத்திமா என்னும் எழுவாய், அச்செயலைப் பிறரைக் கொண்டு செய்விப்பதனால், இது பிறவினைத் தொடராகும்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 26

**42.** தவறான இணை எது?

(A) மணித்தக்காளி- வாய்ப்புண்

(B) முகமுகக்கை வேர் - இருமல்

(C) அகத்திக் கீரை – கண்நோய்

(D) வேப்பபங்கொழுந்து - மார்புச்சளி

விடை : (C) அகத்திக் கீரை – கண்நோய்

விளக்கம் :

1. மணித்தக்காளிக் கீரை வாய்ப்புண், குடற்புண்ணைக் குணமாக்கும்.
2. முசுமுசுக்கைக் கொடியின் வேரைப் பசுவின்பாலில் ஊறவைத்து, உலர்த்திப்பொடியாக்கிப் பசும்பால், மிளகுப்பொடி, சருக்கரையுடன் உண்டு வந்தால் இருமல் நீங்கும்.
3. **அகத்திக்கீரை, பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கும்.**
4. வேப்பங்கொழுந்தைக் காலையில் உண்டு வந்தால், மார்புச்சளி நீங்கும் வேப்பிலையை அரைத்துத் தடவினால் அம்மையால் வந்த வெப்புநோய் அகலும்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 81

**43.** பொருந்தாத இணை எது?

(A) மேற்கு மலையில் இருந்து வந்தவை – சந்தனம், ஆரம்

(B) கீழ்க்கடலில் விளைந்தவை - பவளம்

(C) வடமலையில் இருந்து வந்தது – கறி (மிளகு)

(D) தென்கடலில் இருந்து கிடைந்தவை – முத்து

விடை : (C) வடமலையில் இருந்து வந்தது – கறி (மிளகு)

விளக்கம்:

| | | |
|---|---|---|
| வெளிநாடுகளில் இருந்து கடல்வழி வந்தவை | - | குதிரைகள் |
| உள்நாட்டில் இருந்து தரைவழியில் வந்தவை | - | கறி (மிளகு) |
| வடமலையில் இருந்து வந்தவை | - | மெருகிடப்பட்ட பொன், மணிக்கற்கள் |
| மேற்கு மலையில் இருந்து வந்தவை | - | சந்தனம், ஆரம் |
| தென் கடலில் இருந்து கிடைத்தவை | - | முத்து |
| கீழ்க்கடலில் விளைந்தவை | - | பவளம் |

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 35 [புதியது]

**44.** அகர வரிசைப்படுத்துக.

(A) மிளகு, மருங்கை, முசிறி, மூதூர், மேற்குமலை

(B) முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை, மருங்கை

(C) மருங்கை, மிளகு, முசிறி, மூதூர், மேற்குமலை

(D) மருங்கை, முசிறி, மூதூர், மிளகு, மேற்குமலை

விடை : (C) மருங்கை, மிளகு, முசிறி, மூதூர், மேற்குமலை

**45.** தென்னாட்டைத் தன்னந்தனியெ ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர் யார்?

(A) இராணி மங்கம்மாள்
(B) ஜான்சி ராணி
(C) தில்லையாடி வல்லியம்மை
(D) வேலுநாச்சியார்

விடை : (A) இராணி மங்கம்மாள்

விளக்கம் :

1. மங்கம்மாள் திறமையான ஆட்சியாளர்; எதிர்ப்புகளைத் தன் ஆற்றலாலும் அறிவு நுட்பத்தாலும் முறியடித்து வெற்றி நடைபோட்டவர்;
2. **தென்னாட்டைத் தன்னந்தனியே ஆண்ட பெண்ணரசி என்னும் புகழைப் பெற்றவர்.**
3. துன்பங்கள் நம்மைச் செம்மைப்படுத்தி வளர்ப்பதற்கும், இன்பங்கள் நமக்கு விழிப்பூட்டுவதற்கும் வருவன என்பதனை உணர்ந்தவர்;

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 15

**46.** "வாழ்வினிற் செம்மையைச் செய்பவன் நீயே" என்ற பாடலைத் தமிழ் வாழ்த்தாக ஏற்று கொண்டுள்ள அரசு எது,

(A) தமிழ்நாடு அரசு
(B) புதுவை அரசு
(C) பிரெஞ்சு அரசு
(D) ஆங்கில அரசு

விடை : (B) புதுவை அரசு

விளக்கம் :

1. "வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே" என்ற இவரின் தமிழ்வாழ்த்துப் பாடலைப் **புதுவை அரசு** தனது தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக் கொண்டுள்ளது.
2. தமிழக அரசு பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிறுவி இவர் புகழைப் போற்றியுள்ளது.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 76

**47.** இளங்கோவடிகள் "தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன்" என்று யாரைப் பாராட்டியுள்ளார்?

(A) நாதகுத்தனார்
(B) தோலா மொழித் தேவர்
(C) திருத்தக்க தேவர்
(D) சீத்தலைச் சாத்தனார்

விடை : (D) சீத்தலைச் சாத்தனார்
விளக்கம் :

1. கூலவாணிகள் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது மணிமேகலை. சாத்தான்

என்பது இவரது இயற்பெயர்.

2. திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்; கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்தவர்.
3. இக்காரணங்களினால், இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப் பெற்றார்.
4. இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். **தண்டமிழ் ஆசான், சாத்தான் நன்னூற் புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.** இவரது காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 72

**48.** வாகீசர், அப்பர், தருமசேனர், தாண்டகவேந்தர் என்றெல்லாம் அழைக்கபடுபவர் யார்?

(A) திருநாவுக்கரசர் (B) சுந்தரர்

(C) திருஞானசம்பந்தர் (D) மணிக்கவாசகர்

விடை : (A) திருநாவுக்கரசர்

விளக்கம் :

1. திருநாவுக்கரசர் திருவாமூரில் பிறந்தவர். பெற்றோர் புகழனார், மாதினியார். இவரது தமக்கையார் திலகவதியார்.
2. திருநாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்டபெயர் மருணீக்கியார்.
3. இவருக்குத் **தருமசேனர், அப்பர், வாகீசர்** என்னும் வேறு பெயர்களும் உண்டு.
4. இவரது நெறி தொண்டு நெறி.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 155

**49.** "ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை!
என்ற பாடலின் ஆசிரியர் யார்?

(A) பட்டினத்தார்

(B) மருதகாசி

(C) உடுமலை நாராயண கவி

(D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

விடை : (A) பட்டினத்தார்

விளக்கம் :

1. "திரைக்கவித் திலகம் **அ. மருதகாசி** பாடல்கள்" என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
2. சமூகம் என்னும் தலைப்பின் கீழ் இடம் இடம்பெற்றுள்ளது

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 42

**50.** செல்வச் செவிலி – இலக்கணக் குறிப்பு

(A) உவமை (B) அடுக்குத் தொடர்

(C) எண்ணும்மை (D) உருவகம்

விடை : (D) உருவகம்

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 152

**51.** குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
ண்டாகச் செய்வான் வினை
- இவ்வடிகளில் கைத்தொன்று – பொருள் யாது?

(A) படைகவசம் (B) படை கருவிகள்

(C) கைப்பொருள் (D) வலிமையான ஆயுதம்

விடை : (C) கைப்பொருள்

விளக்கம் :

1. பொருள்: தன் கைப்பொருள் கொண்டு ஒருவன் செய்யும் செயலானது குன்றின்மேல் இருந்து கொண்டு யானைப்போரைக் காண்பதற்கு ஒப்பானது.
2. கைத்தொன்று- கைப்பொருள்

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 152

**52.** பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு – எதுகை வகையைக் கண்டுபிடிக்கவும்

(A) பொழிப்பு எதுகை (B) கூழை எதுகை

(C) மேற்கதுவாய் எதுகை (D) கீழ்க்கதுவாய் எதுகை

விடை : (B) கூழை எதுகை

விளக்கம் :

**கூழை எதுகை (1, 2, 3)**
ஓர் அடியுள் முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகை எனப்படும்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 77

**53.** "அழக்கொண்ட எல்லாம் அழப்போம், இழப்பினும்" – இந்த அடியில் அமைந்துள்ள எதுகையைத் தேர்க.

(A) கூழை எதுகை (B) மேற்கதுவாய் எதுகை

(C) கீழ்க்கதுவாய் எதுகை (D) பொழிப்பு எதுகை

விடை : (B) மேற்கதுவாய் எதுகை

விளக்கம் :

**மேற்கதுவாய் எதுகை (1, 3, 4)**
ஓர் அடியுள் முதல், மூன்று, நாலாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகை எனப்படும்.
புத்தகம் : 9ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 77

**54.** பொருத்துக

| வேற்றுமை | உருபு |
|---|---|
| (a) நான்காம் வேற்றுமை | 1. இன் |
| (b) ஐந்தாம் வேற்றுமை | 2. அது |

(c) ஆறாம் வேற்றுமை 3. கண்

(d) ஏழாம் வேற்றுமை 4. கு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

விடை : (A) 4 1 2 3

**55.** கீழ்க்கண்ட கூற்றுகளுள் சரியானவற்றைத் தேர்வு செய்க.

1. தாயுமானவர் பிறந்த ஊர் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பழவேற்காடு
2. இவர் காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு
3. தாயுமானவர் திருப்பாடல் திரட்டு என்பது இவர் எழுதிய நூல்
4. திருச்சியை ஆண்ட விசயரகுநாத சேதுபதியிடம் அலுவலராகப் பணியாற்றியவர்

(A) 1, 4 சரி (B) 2, 3 சரி (C) 2, 4 சரி (D) 1, 3 சரி

விடை : (B) 2, 3 சரி

விளக்கம் :

1. பெயர் -தாயுமானவர்
2. ஊர் -நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருமறைக்காடு
3. நூல் -தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
4. காலம் -கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு
5. பணி -திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்

புத்தகம் : 8ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 2

**56.** தாயுமானவர் ஆற்றிய பணி எது?

(A) அரசுக்கணக்கர் (B) தட்டச்சுப்பணியாளர்

(C) பத்திரிக்கையாளர் (D) இசைப்பணியாளர்

விடை : (A) அரசுக்கணக்கர்

விளக்கம் :

1. கேடிலியப்ப பிள்ளை திருச்சிராப்பள்ளி ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசரிடம் **கணக்கராகப்** பணிபுரிந்து வந்தார்.
2. அவர் மறைவுக்குப் பின்னர்த் தாயுமானவர் அப்பணியை ஏற்றார்.
3. விஜயரங்க சொக்க நாத நாயக்கர் ஆட்சியிலும், அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராகப் பணியாற்றினார்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 1

**57.** தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல் எது?

(A) துறைமுகம் (B) சுவரும் சுண்ணாம்பும்

(C) தேன்மழை (D) சுரதாவின் கவிதைகள்

விடை : (C) தேன்மழை

விளக்கம் :

1. **தேன்மழை** என்னும் கவிதை நூல், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது.
2. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணிப் பட்டத்தையும், தமிழக அரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 7

**58.** "இரட்டைக்கிளவி போல் இணைந்தே வாழுங்கள் பிரிந்தால் பொருளில்லை. . . . " என்று பாடியவர் யார்?

(A) சுரதா (B) மு.மேத்தா

(C) தாரா பாரதி (D) அப்துல் ரகுமான்

விடை : (A) சுரதா

**59.** பாரதிதாசனார் இயற்றிய நாடக நூல் எது?

(A) கண்ணகி புரட்சிக் காப்பியம் (B) பிசிராந்தையார்

(C) சுவரும், சுண்ணாம்பும் (D) பாண்டியன் பரிசு

விடை : (B) பிசிராந்தையார்

விளக்கம் :

1. குடும்பவிளக்கு, பாண்டியன் பரிசு, இருண்டவீடு, தமிழச்சியின் கத்தி, சேரதாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு ஆகிய காப்பியங்களையும் இறவாப் புகழ் பெற்ற எண்ணற்ற பாடல்களையும் இயற்றியவர்.
2. இவர் இயற்றிய **பிசிராந்தையார் நாடகம்** சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்றது

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 76

**60.** நாமக்கல் கவிஞருக்கு "பத்மபூஷன்" விருது வழங்கிச் சிறப்பித்தது யார்?

(A) நடுவணரசு (B) மாநில அரசு

(C) ஆங்கில அரசு (D) பிரெஞ்சு அரசு

விடை : (A) நடுவணரசு

விளக்கம் :

1. தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர்.
2. **இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கிச் சிறப்பித்தது**.
3. இவர், தமிழக மக்களால் காந்தியக் கவிஞர் எனப் பெருமையுடன் வழங்கப்படுகிறார்.
4. இவரின் காலம் கி.பி. 1888 முதல் 1972 வரையாகும்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 7

**61.** துடியன், நாயினன் தோல் செருப்பு ஆர்த்த பேர்
அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்

-இக்கூற்றிற்குரியவர் யார்?

(A) இராமன் (B) இலக்குவன்

(C) அனுமன் (D) குகன்

விடை : (D) குகன்

விளக்கம் :

பொருள் : **குகன்** துடியென்னும் பறை உடையவன்; வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன்; தோல் செருப்பணிந்த பெருங்கால்களை உடையவன்; இருள் போன்ற கரிய நிறத்தையுடையவன்; கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற்போன்ற மிகுதியான படைபலம் உடையவன்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 58

**62.** பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

(A) நற்றிணை (B) குறிஞ்சிப்பாட்டு (C) பரிபாடல் (D) ஏலாதி

விடை : (D) ஏலாதி

விளக்கம் :

1. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் **ஏலாதியும்** ஒன்று.
2. இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.
3. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது.
4. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 11

**63.** பெருமுத்தரையர்கள் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ள நூல் யாது?

(A) இன்னா நாற்பது (B) நான்மணிக்கடிகை

(C) நாலடியார் (D) சிறுபஞ்சமூலம்

விடை : (A) இன்னா நாற்பது

**64.** கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால் அவர்களிடம் உள்ள ________ ஆகும்.

(A) நற்பண்பு (B) நற்குணம்

(C) புகழ் (D) நல்லெண்ணங்கள்

விடை : (D) நல்லெண்ணங்கள்

விளக்கம் :

1. குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள். அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள், அவள் பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள்.
2. மனத்திற்கினிய அன்பு மிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி.
3. **அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே.**

புத்தகம் : 6ஆம் வகுப்பு, பக்க எண் – 48

**65.** பொருட்பாலின் இயல்கள்

(A) பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

(B) அரசியல், அங்கலியல், ஒழிபியல்

(C) களவியல், கற்பியல்

(D) பாயிரவியல், அரசியல், களவியல்

விடை : (B) அரசியல், அங்கலியல், ஒழிபியல்

விளக்கம் :

1. அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களை உடையது. அது பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டு விளங்குகிறது என்பர் அறிஞர்.
2. பொருட்பால் எழுபது அதிகாரங்களையும் **அரசியல், அங்கவியல், ஒழிபியல்** என்னும் மூன்று இயல்களையும் கொண்டு அமைந்துள்ளது.
3. காமத்துப்பால் இருபத்தைந்து அதிகாரங்களையும் களவியல், கற்பியல் என்ற இரண்டு இயல்களையும் கொண்டு விளங்குகிறது.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 23

**66.** பாகற்காய் - பிரித்தெழுதுக

(A) பாகு + அல் + காய்

(B) பாகு + அகற்காய்

(C) பாகற் + காய்

(D) பாகு + கல் + காய்

விடை : (A) பாகு + அல் + காய்

விளக்கம் :

பாகற்காய் கசப்புச்சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல். இனிப்பு அல்லாத காய் **பாகற்காய் (பாகு + அல் + காய்)** என வழங்கினர்.

புத்தகம் : 6ஆம் வகுப்பு, பக்க எண் – 9 [புதியது]

**67.** பைந்நிணம் பிரித்தெழுதுக

(A) பை + நிணம்

(B) பை + இணம்

(C) பசுமை + நிணம்

(D) பசுமை + இணம்

விடை : (C) பசுமை + நிணம்

**68.** "திருத்தொண்டர் புராணம்" என்ற அடைமொழியால் அழைக்கப்படும் நூல்

(A) திருவிளையாடற்புராணம்

(B) மேருமந்த புராணம்

(C) திருவாசகம்

(D) பெரியபுராணம்

விடை : (D) பெரியபுராணம்

விளக்கம் :

1. அடியார்களின் வரலாற்றைக் கூறுவதால், பெருமை பெற்ற புராணம் என்னும் பொருளில் "**பெரியபுராணம்**" என்னும் பெயர் பெற்றது.

2. இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர், "திருத்தொண்டர் புராணம்"

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 110

**69.** மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல் எது?

(A) ஐங்குறுநூறு (B) குறுந்தொகை

(C) கலித்தொகை (D) புறநானூறு

விடை : (A) ஐங்குறுநூறு

விளக்கம் :

1. ஐங்குறு நூற்றில் மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்ட 500 பாடல்கள் உள்ளன.
2. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் வரிசைமுறையில் அமைக்கப்பட்டு, ஒவ்வொருதிணையும் 100 பாடல்களைக் கொண்டுள்ளது.
3. ஒவ்வொரு திணையிலுமுள்ள 100 பாடல்களும் பத்துப் பத்துப்பாடல்கள் கொண்ட பத்துப்பகுதிகளாகத் தனித்தனித் தலைப்புகளின் கீழ்ப் பகுக்கப்பட்டுள்ளன.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 15

**70.** "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

(A) சிற்பி (B) சி.சு. செல்லப்பத

(C) ந.பிச்சமூர்த்தி (D) மு.மேத்தா

விடை : (B) சி.சு. செல்லப்பத

விளக்கம் :

1. சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.
2. **"எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.**

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 65 [புதியது]

**71.** வழக்குரைஞராகவும், இந்துசமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றிய கவிஞர் யார்?

(A) அப்துல் ரகுமான் (B) சிற்பி

(C) ந. பிச்சமூர்த்தி (D) இரா. மீனாட்சி

விடை : (C) ந. பிச்சமூர்த்தி

விளக்கம் :

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | ந. வேங்கட மகாலிங்கம் |
| புனைபெயர் | - | ந. பிச்சமூர்த்தி |
| ஊர் | - | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் |
| தொழில் | - | **1924 – 1938 வரை வழக்குரைஞர்** |
| | | **1938 – 1954 வரை கோவில் நிருவாக அலுவலர்** |
| எழுத்துப்பணி | - | கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள் |

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 3

**72.** “ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!” என்று கூறியவர் யார்?

(A) மு.மேத்தா (B) பசுவய்யா

(C) ந. பிச்சமூர்த்தி (D) ஈரோடு தமிழன்பன்

விடை : (D) ஈரோடு தமிழன்பன்

விளக்கம் :

1. ஈரோடு தமிழன்பன் எழுதிய தமிழோவியம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ள கவிதை இது.
2. இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் **"ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்து கொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்'"** என்று குறிப்பிட்டுள்ளார்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 9 [புதியது]

**73.** “தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த்” என்று பாராட்டப்படும் தமிழ் கவிஞர்

(A) பாரதிதாசன் (B) நாமக்கல் கவிஞர்

(C) வாணிதாசன் (D) முடியரசன்

விடை : (C) வாணிதாசன்

விளக்கம் :

1. “கவிஞரேறு”, “பாவலர்மணி” என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார்.
2. தமிழகத்தின் **"வேர்ட்ஸ் வொர்த்"** என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது.
3. உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர்தம் பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 22

**74.** எட்டுத்தொகை நூல்களுள் முதலாவது வைத்து எண்ணப்படும் நூல்

(A) அகநானூறு (B) ஐங்குறுநூறு

(C) நற்றிணை (D) பரிபாடல்

விடை : (C) நற்றிணை

விளக்கம் :

1. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்கநூல்கள் எனப் போற்றப்படுவன.
2. **எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதும், "நல்" என்று அடைமொழி கொடுத்துப் போற்றப்படுவதும் நற்றிணையே.**
3. இஃது அகத்திணை நூலாகும்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 87

**75.** அகத்திணையும், புறத்திணையும் சேர்த்துக் கூறும் எட்டுத்தொகை நூல் எது?

(A) பரிபாடல் (B) நற்றிணை

(C) ஐங்குறுநூறு (D) பதிற்றுப்பத்து

விடை : (A) பரிபாடல்

விளக்கம் :

1. எட்டுத் தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறப்பொருள் இலக்கியங்களாகும்.
2. ஏனைய ஆறும் அகப்பொருள் இலக்கியங்களாகும். எனினும் இப்பொழுது நம்மிடை வழங்கும் பரிபாடல் தொகை நூலுள் புறப்பாடல்கள் மிகுதியாக உள்ளன.
3. அதனால் **பரிபாடலை அகமும் புறமும் கலந்த பாடல் தொகுதி** எனலாம்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 11

**76.** தவறான இணையைத் தேர்வு செய்க

(A) குறிஞ்சி – கபிலர்

(B) முல்லை - ஓதலாந்தையார்

(C) மருதம் – ஓரம்போகியார்

(D) நெய்தல் – அம்மூவனார்

விடை : (B) முல்லை - ஓதலாந்தையார்

விளக்கம் :

1. மருதத்திணைப்பாடல் - ஓரம் போகியார்,
2. நெய்தல்திணைப்பாடல் - அம்மூவனார்,
3. குறிஞ்சித்திணைப்பாடல்-கபிலர்,
4. பாலைத்திணைப்பாடல்-ஓதலாந்தையார்
5. முல்லைத்திணைப்பாடல்- பேயானார்.

புத்தகம் : 11ஆம் வகுப்பு, பக்க எண் – 15

**77.** பின்வருவனவற்றுள் தவறானதைத் தேர்வு செய்க

(A) கம்பர் தேரழுந்தூரில் பிறந்தவர்

(B) கம்பரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி

(C) சரசுவதி அந்தாதியை இயற்றியவர் கம்பர்

(D) கம்பரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு

விடை : (B) கம்பரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி

விளக்கம் :

1. நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் கம்பர் பிறந்தார்.
2. இவர் ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.
3. திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றார்.
4. இவரின் காலம் கிபி. பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 2

**78.** குழலியும் பாடத் தெரியும் – தொடரில் உள்ள பிழையை நீக்கி சரியான தொடரை தேர்ந்தெடுக்க

(A) குழலிக்குப் பாடத்தெரியும் (B) குழலியின் பாடத்தெரியும்

(C) குழலி பாடத்தெரியும் (D) குழலியால் பாடத்தெரியும்

விடை : (A) குழலிக்குப் பாடத்தெரியும்

**79.** தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

(A) அனுமதி (B) ஈசன்

(C) குபேரன் (D) மணிமுடி

விடை : (D) மணிமுடி

விளக்கம் :

1. அனுமதி - இசைவு
2. ஈசன் - இறைவன்
3. குபேரன் - பெருஞ்செல்வன்
4. கிரீடம் - மணிமுடி

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 22

**80.** பொருந்தா இணையைச் சுட்டுக

(A) குறிஞ்சி – யாமம்

(B) முல்லை - மாலை

(C) மருதம் – நண்பகல்

(D) நெய்தல் - ஏற்பாடு

விடை : (C) மருதம் – நண்பகல்

விளக்கம் :

| **திணை** | **பெரும் பொழுது** | **சிறு பொழுது** |
|---|---|---|
| குறிஞ்சி<br>முல்லை<br>மருதம்<br>நெய்தல்<br>பாலை | குளிர்காலம்,<br>முன்பனிக்காலம்<br>கார்காலம்<br>ஆறு பெரும் பொழுதுகள்<br>ஆறு பெரும் பொழுதுகள்<br>இளவேனில்,<br>முதுவேனில், பின்பனி | யாமம்<br>மாலை<br>வைகறை<br>ஏற்பாடு<br>நண்பகல் |

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 167

**81.** மீசை – எதிர்சொல் காண்க.

(A) இசை (B) கீழ்

(C) விசை (D) நாள்

விடை : (B) கீழ்

**82.** கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் – இத்தொடருக்குரிய சரியான எதிர்ச்சொல்லைத் தருக.

(A) கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்

(B) கலைச்செல்வி கட்டுரை எழுது விரும்பவில்லை

(C) கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்

(D) கலைச்செல்வி கட்டுரை வாசிக்கவில்லை

விடை : (A) கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்

விளக்கம் :

இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இஃது **எதிர்மறைத் தொடர்.**
புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 27

**83.** "கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோள்" எனக் கூறியவர் யார்?

(A) கந்தர்வன் (B) நாஞ்சில் நாடன்

(C) புதுமைப்பித்தன் (D) வண்ணதாசன்

விடை : (C) புதுமைப்பித்தன்
விளக்கம் :

1. கதை தீடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது.
2. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்று ஒன்று கிடையாது.
3. அதாவது **கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்**

புத்தகம் : 11ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 74 [புதியது]

**84.** தொல்காப்பியத்தில் நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்த இயல்

(A) மரபியல் (B) பொருளியல்

(C) மெய்ப்பாட்டியல் (D) களவியல்

விடை : (C) மெய்ப்பாட்டியல்
விளக்கம் :

1. தொல்காப்பிய **மெய்ப்பாட்டியல்**, நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்து இருக்கிறது.
2. "கூத்தாட்டவைக்குழாத் தற்றே" என்னும் குறள்வழியாக நாடக அரங்கம் இருந்த செய்தி தெரிய வருகிறது.

புத்தகம் : 8ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 29

**85.** பண்ணொடு கலந்தும் தாளத்தோடு கூடியும் பாடும் கலை எது?

(A) நாடகக்கலை (B) நாட்டியக்கலை

(C) இசைக்கலை (D) ஓவியக்கலை

விடை : (C) இசைக்கலை

**86.** “சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு” – என்று கூறியவர்

(A) அண்ணா (B) காந்தி

(C) அம்பேத்கர் (D) மு. வரதராசனார்

விடை : (A) அண்ணா

விளக்கம் :

**இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில**

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (இரண்டாம் பருவம்) பக்க எண் – 15

**87.** குண்டலகேசியின் கதைத் தலைவி – குண்டலகேசி அவளின் வேறு பெயர்.

(A) கைகேயி (B) பத்தரை

(C) சுமத்திரை (D) மாதவி

விடை : (B) பத்தரை

**88.** கவுந்தியடிகள் எந்த மதத்தைச் சாரந்த துறவி?

(A) சமணத் துறவி (B) பௌத்தத் துறவி

(C) இஸ்லாமியத் துறவி (D) சைவ துறவி

விடை : (A) சமணத் துறவி

விளக்கம் :

1. கோவலன் வாணிகம் செய்தற்பொருட்டுக் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான்.
2. அவர்களுக்கு வழித்துணையாகக் **கவுந்தியடிகள் என்னும் சமணத்துறவி** சென்றார். அவர், மதுரை நகர்ப்புறத்தில் மாதரி என்னும் இடைக்குல மூதாட்டியிடம் அவ்விருவரையும் அடைக்கலப்படுத்தினார்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் –32

**89.** சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக கருதப்படும் நூல் யாது?

(A) சீவகசிந்தாமணி (B) மணிமேகலை

(C) குண்டலகேசி (D) நீலகேசி

விடை : (B) மணிமேகலை

**90.** "அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள்! – மன்னுபார்க் கெல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும்"
இவ்வடிகள் இடம் பெறும் நூல் எது?

(A) சிலம்பு (B) கம்ப இராமாயணம்

(C) மணிமேகலை (D) பெரிய புராணம்

விடை : (C) மணிமேகலை

விளக்கம் :

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல். - **மணிமேகலை**

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 71 [புதியது]

**91.** குறுந்தொகை நூலின் "பா" – வகை யாது?

(A) கலிப்பா (B) வஞ்சிப்பா

(C) வெண்பா (D) அகவற்பா

விடை : (D) அகவற்பா

**92.** சொல்லுக்கேற்ற பொருளறிக

(A) வலிமை - திண்மை (B) நாண் - தன்னைக்குறிப்பது

(C) கான் - பார் (D) துணி - துன்பம்

விடை : (A) வலிமை – திண்மை

**93.** சரியான இணையைத் தேர்ந்தெடு

| மரை | | மறை. |
|---|---|---|
| (A) மான் | – | வேதம் |
| (B) தாமரை | - | புலன் |
| (C) வேதம் | - | இயல்பு |
| (D) யானை | - | மறைத்தல் |

விடை : (A) மான் – வேதம்

**94.** ஜெராக்ஸ் (Xerox) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்

(A) ஒளி நகல் (B) ஒலி நகல்

(C) அசல் படம் (D) மறுபடம்

விடை : (A) ஒளி நகல்

விளக்கம் :

அனைத்துத் துறைகளிலும் **நகல் எடுக்கப் பயன்படுகின்ற முக்கியமான இயந்திரம்** இது. அனைவரும் ஜெராக்ஸ் (Xerox) என்று பொதுவாகக் கூறுவது வழக்கத்தில் உள்ள சொல்.

புத்தகம் : 9ஆம் வகுப்பு, (முதல் பருவம்) பக்க எண் – 97 [புதியது]

**95.** "மா" ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்

(A) பெரிய (B) இருள்

(C) வானம் (D) அழகு

விடை : (A) பெரிய

விளக்கம் :

மா – என்னும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.

புத்தகம் : 6ஆம் வகுப்பு, பக்க எண் – 10 [புதியது]

**96.** பரிதிமாற் கலைஞர் என்று போற்றப்படக் கூடியவர்

(A) மறைமலையடிகள்

(B) உ.வே. சாமிநாத ஐயர்

(C) வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

(D) வையாபுரிப் பிள்ளை

விடை : (C) வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

விளக்கம் :

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பரிதிமாற்கலைஞர்..
2. **சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் தம் பெயரைப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழாக்கிக் கொண்டவர்.**
3. இவர், மதுரையை அடுத்த விளாச்சேரி என்னும் சிற்றூரில் கோவிந்தசிவனார், இலட்சுமி அம்மாள் இணையரின் மூன்றாவது மகனாக, 1870ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஆறாம் நாள் பிறந்தார்.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 19

**97.** "தமிழே மிகவும் பண்பட்ட மொழி" என்று பாராட்டியவர் யார்?

(A) கமில்சுவலபில் (B) மாக்சு முல்லர்

(C) முனைவர் எமினோ (D) வில்லியம் ஜோன்ஸ்

விடை : (B) மாக்சு முல்லர்

விளக்கம் :

1. மாக்கமுல்லர் என்னும் மொழி நூலறிஞரோ **தமிழே மிகவும் பண்பட்ட**

**மொழி**யென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் பாராட்டியிருக்கின்றார்.
2. உலக இலக்கியங்கள் எவற்றிற்கும் இல்லாத் தனிச்சிறப்பு, சங்க இலக்கியங்களுக்கு உண்டு.

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 15

**98.** “இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது” என்றவர் யார்?

(A) மாக்சு முல்லர் (B) கால்டுவெல்
(C) கெல்லட் (D) எமினோ

விடை : (D) எமினோ

விளக்கம் :

1. தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பிறப்பு முறைகள் மொழி நூலாரையே வியப்பில் ஆழ்த்துகின்றன.
2. **“இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது” என்பார் முனைவர் எமினோ,**

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 16

**99.** விளையாட்டின் அடிப்படை நோக்கம் என்ன?

(A) போட்டி (B) பொழுதுபோக்கு
(C) உடற்பயிற்சி (D) உற்சாகம்

விடை : (A) போட்டி

விளக்கம் :

1. விளையாட்டின் அடிப்படை நோக்கம் போட்டியிடுதலாகும்.
2. உடலிலும் உள்ளத்திலும் உள்ள ஆற்றல்களை வெளியிடவும், எதிர்பாராத தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் விளையாட்டு உதவுகிறது.
3. விளையாட்டு வழியாகப் பட்டறிவும், போராட்டத்திற்கு விடை காணும் திறனும் பெற முடிகிறது.

புத்தகம் : 7ஆம் வகுப்பு, (மூன்றாம் பருவம்) பக்க எண் – 34

**100.** ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?

(A) எட்வார்டு மை பிரிட்சு (B) வால்ட் விட்டமன்
(C) எடிசன் (D) கீட்ஸ்

விடை : (C) எடிசன்

விளக்கம் :

1. ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830ஆம் ஆண்டு கண்டுபிடித்த பின்னர், எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றார்.
2. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.
3. **எடிசன், ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டுபிடித்தார்.**

4. பிரான்சிஸ் சென்கின்சு என்ற அமெரிக்கர் 1894இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப்படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்

புத்தகம் : 10ஆம் வகுப்பு, பக்க எண் – 113




ISO 9001: 2015